# செட்டிநாடும் சாமான்களும்

செட்டிநாடு என்றாலே நம் நினைவுக்கு வருவது செட்டிநாட்டுப் பண்பாடும், பாரம்பரியமும், தேக்குமரத்திலான மாளிகைகளும், பாரம்பரியமிக்க உணவு வகைகளும், மூன்று நாள் திருமணங்களும், சிறப்பான சடங்கு முறைகளும், தனித்துவமான தங்க நகைகளும், வகை வகையான வைர நகைகளும், எண்ணிலடங்காத சீர்வரிசைகளும், சாமான்களும் தான்.

செட்டிநாட்டில் எத்தனையோ வகையான சாமான்கள் உள்ளது. செட்டிநாட்டு சாமான்கள் என்று பொதுப்படையாய் கூறினால் மிகையாகாது. மர சாமான்கள் முதல் தொடங்கி, மங்கு சாமான்கள், வெண்கல சாமான்கள், செம்பு அல்லது காசானி சாமான்கள், மண் சாமான்கள், கல் சாமான்கள், பீங்கான் சாமான்கள், ஓலையால் செய்த சாமான்கள், இரும்பு சாமான்கள், மற்றும் விலை உயர்ந்த வெள்ளி சாமான்கள் என பல வகையான சாமான்கள் செட்டிநாட்டில் உள்ளன. இந்த சாமான்கள் அனைத்தையும் கொள்ளுப்பாட்டி, பாட்டி, ஆயா, ஆத்தா, மகள் என்று வழி வழியாக கொடுப்பார்கள். இதன் அழகை செட்டிநாட்டு திருமணங்களில் பரப்பி வைத்திருக்கும்போது பார்க்கலாம்.

இச்சாமான்களில் எனக்கு தெரிந்தவற்றை இங்கே இந்தக் கட்டுரையில் பதிவிட்டுள்ளேன்.

### மர சாமான்கள்:

- அரிவாள்மணை - காய்கறி நறுக்குவதற்கு
- சோத்துப்பலகை, குத்துக்கட்டை - சோறு வடிப்பதற்கு
- இடியப்பக்கட்டை, தேன்குழல்கட்டை, பிரண்டமுறுக்குக்கட்டை - பலகாரம் செய்வதற்கு
- பன்னாங்குழி - விளையாடுவதற்கு
- தாயப்பலகை - தாயம் விளையாடுவதற்கு
- குந்தாணி, உலக்கை - மாவு இடிப்பதற்கு
- ரங்கோன் மரவை - பழம் வைப்பதற்கு, அர்ச்சனை சாமான் வைப்பதற்கு
- மாவிலியா குந்தாணி - சூப்பிடி என்னும் சடங்கு ஆண்பிள்ளைகளுக்கு செய்யும் பொழுது உபயோகப்படுத்துவார்கள்
- பழத்தட்டு
- காய்கறித்தட்டு
- கைப்பெட்டி
- தாளிக்கும் மரடப்பா
- அகப்பை - பால் காய்ச்சும் கரண்டி
- ஆசனப் பலகை - உட்காருவதற்கு
- மரப்பெட்டகம் - எருவிராட்டி வைப்பதற்கு
- தேக்கு கண்ணாடி பீரோ
- தேக்கு அலமாரி பீரோ



- தேக்கு மெத்த பீரோ
- ஜோடி நாற்காலி
- மத்து - மோர் கடைவதற்கு
- துடுப்பு - கூழ் கிண்டுவதற்கு
- மரப்பாச்சி பொம்மை
- மரச்சிட்டி - பிள்ளைகள் விளையாடுவதற்கு
- நடைவண்டி - பிள்ளைகள் பிடித்து நடை பழகுவதற்கு
- தொட்டிக் கம்பு - தொட்டிலை அகலப்படுத்துவதற்கு



### மங்கு சாமான்கள்:

- அரிகரண்டி - சமைப்பதற்கு
- வாளி
- சட்டி
- ஆழக் கரண்டி
- ஏந்தக் கரண்டி
- இட்டுவட்டி (சோறு போடும் கரண்டி) உப்பு ஜாடி
- புளி ஜாடி
- தட்டு
- தொன்னைமங்குச் சட்டி
- குடச் சட்டி
- தூக்குச் சட்டி
- கும்பா (சாப்பிடுவதற்கு)
- வடிதட்டு - காய் வடிப்பதற்கு
- கிண்ணம்
- ஊறுகாய் போகனி
- மோர்மன் ஜாடி
- எச்சி பணிக்கம் - வெற்றிலை பாக்கு எச்சிலை துப்புவதற்கு
- கோர்வை சட்டி - சாப்பாடு கொண்டுசெல்லும் அடுக்கு சட்டி






### வெண்கல சாமான்கள்:

- மணவறை முக்காலி - திருமணத்தின் போது மணவறையின் அருகில் சடங்கு செய்வதற்கு
- கடகா வாளி - கிணற்றில் தண்ணி இரைப்பதற்கு
- பொங்கஉருளி - பொங்கல் வைப்பதற்கு
- அரிகரண்டி - சமைப்பதற்கு
- காதுவைத்த கிடாரம் - மழைத் தண்ணீர் சேமிப்பதற்கு
- வேம்பா - தண்ணீர் சூடு செய்து குளிப்பதற்கு
- சோறு கொட்டும் அடுக்குச் சட்டி (5 சட்டிகள் கொண்டது ஒரு அடுக்கு)
- போகனி அண்டா - உணவு வகைகள் வைப்பதற்கு
- சருவச் சட்டி - சோறு கொட்டி வைப்பதற்கு
- கரகச் சட்டி, கரகச் சொம்பு - பௌர்ணமி பொங்கலில் வைப்பதற்கு
- மாவு சலிக்கும் சல்லடை
- தெக்கூர் தவலை
- கும்பகோணம் தவலை
- எழுத்தாணி - எழுதுவதற்கு
- தாம்பாளம்
- சொருகு சட்டி
- இட்லி சட்டி
- விசிறி - சாமிக்கு வீசுவதற்கு





### செம்பு அல்லது காசானி சாமான்கள்:

- நெல் அவிக்கிற அண்டா - நெல் அவிப்பதற்கு
- காசானி அண்டா
- காசானித் தவலை



### மண் சாமான்கள்:

- மண்சட்டி
- மண்பானை
- மண் அடுப்பு
- மண் சங்கு
- மண் கலயம்



### கல் சாமான்கள்:

- மாக்கல் விளக்கு
- மாக்கல் சட்டி - ஊறுகாய் போடுவதற்கு
- ஆட்டுக்கல் + குழவி
- அம்மிக்கல் + குழவி
- திருகை



### ஓலையால் செய்த சாமான்கள்:

- ஏடு - எழுதுவதற்கு
- பிரம்புக் கூடை
- ஒருகாசுப்பெட்டி
- கொட்டான்
- ஓலை விசிறி



### வெள்ளி சாமான்கள்:

- தேங்காய் சட்டி - விசேஷங்களில் தேங்காய் எடுத்து செல்வதற்கு
- திருப்பூட்டும் தட்டு - திருமணத்தன்று திருப்பூட்டும் சேலை, மாலை மற்றும் தாலி வைப்பதற்கு
- பால் சொம்பு, கெண்டிச் சொம்பு - மாமியார், நாத்தனார் சடங்கு செய்வதற்கு
- கரகச் சட்டி, கரகச் சொம்பு - பௌர்ணமி பொங்கலில் வைப்பதற்கு
- சங்கு - ஊதுவதற்கு
- குதிரை விளக்கு
- சிலேட்டு விளக்கு - ஆலாத்தி எடுக்கும் போது வைப்பதற்கு
- கடகாம் - வேவு இறக்குவதற்கு
- குத்து விளக்கு
- பிள்ளையார்
- கிலிக்கி
- சடங்குத் தட்டு
- நிறைநாழி
- கத்தரிக்காய்
- பூக்கூடை
- வெள்ளிக் குடம்
- தீர்த்தம் குடிக்கும் தட்டு
- விளக்கு இடும் சட்டி
- வெள்ளிச் சொம்பு



### இரும்பு சாமான்கள்:

- ஊதாங்குழல் - அடுப்பு ஊதுவதற்கு
- பத்திக்கொரடு - அடுப்பு கறியை தள்ளிவிடுவதற்கு
- இரும்பு அடுப்பு
- தோசைக்கல்
- இருப்புச்சட்டி
- ஆப்பச்சட்டி
- பணியாரச்சட்டி
- சூர் கத்தி - மாமிசம் நறுக்குவதற்கு
- கிணற்று ரோதை (உருளை) - தாம்புக்கயிற்றைப் போட்டு தண்ணீர் இழுத்து எடுப்பதற்கு
- பாதாளக் கரண்டி - கிணற்றுக்குள் வாளிகள் விழுந்தால் எடுக்கும் சாதனம்
- இரும்புப் பெட்டகம் - பணம், பத்திரங்கள் மற்றும் நகைகள் வைப்பதற்கு
- சாவி



### இதர சாமான்கள்:

- வள்ளுவப்பை - திருப்பூட்டும் தாலி மற்றும் கழுத்துரு வைப்பதற்கு
- ஜமுக்காளம்
- பந்திப்பாய் - உட்கார்ந்து சாப்பிடுவதற்கு
- தடுக்கு - உட்காருவதற்கு
- சடப்பரம்பாய் - விருந்தாளிக்கு விரிப்பதற்கு
- மெத்தப்பாய் - கீழே விரித்து படுப்பதற்கு
- கோரம்பாய் - கீழே விரித்து படுப்பதற்கு
- தாம்புக்கயிறு - கிணற்றில் தண்ணீர் இழுத்து எடுப்பதற்கு
- சில வீடுகளில் மான்கொம்புகளும், யானைத் தந்தங்களும் இருக்கும்




நகரத்தார் திருமணங்களில் சாமான் பரப்புவது ஒரு தனி சடங்காக நடத்தப்படுகிறது. பெண்வீட்டார் (அயித்தை, சின்னத்தாள், ஆச்சி, அம்மாமிண்டி) மேலே குறிப்பிட்டுள்ள சாமான்களை, அழகாக பரப்பி அனைவருக்கும் காட்டுவார்கள். நகரத்தார்கள் உலகெங்கும் சென்று பொருளீட்டும் இக்காலத்தில், இச்சாமான்களை தமது சொந்தஊரில் வைத்து பாதுகாப்பது மிகக்கடினமான உள்ளது. ஆதலால் இப்பொழுது தேவைப்படும் சாமான்களை மட்டும் கொடுக்கிறார்கள். அனைத்து சாமான்களையும் திருமணங்களில் பரப்பும் சடங்கு குறைந்து வருகிறது என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

காலம்காலமாய் நம் முன்னோர்கள் வழி வழியாக நமக்காக சேர்த்து வைத்த அரிய பொருள்களை நாம் பத்திரமாய் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்போம்.

**வாழ்க நகரத்தார் வளர்க நம்மினம்!**



**பிரபாவதி நடேசன்**

என் பெயர் பிரபாவதி. எனது சொந்த ஊர் தேவகோட்டை. நான் திருச்சியில் வசிக்கிறேன். எனக்கு கோவிலுக்கு செல்வது மிகவும் பிடிக்கும். பல புண்ணிய ஸ்தலங்கள் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வைஷ்ணவி தேவி வரை பார்த்துள்ளேன்.

தேவகோட்டை